**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.88/2015

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. ஆறுமுகம் | வயது:49 |
| த/பெ. : திரு. முத்துசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

நான் வாதி நிறுவனத்தின் முதுநிலை வியாபார மேலாளராக 17 வருடங்களாக பணிபுரிகிறேன். எங்களுடைய நிறுவனம் எனக்கு அளித்த அடையாள அட்டை சமர்ப்பிக்கிறேன். அது சரிபார்க்கப்பட்டது. எங்களுடைய நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எதிராக ரூ.4,30,269/– செலுத்தவேண்டும் என்று தாவா தாக்கல் செய்யப்பட்டது. பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தவறியதால் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டார். எங்கள் நிறுவனம் தாவாவில் கோரியவாறு 22.12.2016 ம் தேதி பிரதிவாதி நிறுவனம் வாதி நிறுவனத்திற்கு தாவா தொகையை வட்டி மற்றும் செலவு தொகையுடன் செலுத்தவேண்டும் என்று தீர்ப்பானது. அதன் பிறகு பிரதிவாதிகள் தரப்பில் காலதாமத மனுவுடன் தாவாவில் ஏற்பட்ட ஒருதலை பட்ச தீர்ப்பாணை ரத்து செய்யபடி மனு தாக்கல் செய்யப்பட்டு இடைகால மனு எண். 1/2024, இடைகால மனு எண். 3/2024, கோப்புக்கு எடுக்கப்பட்டு இன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக ஏற்பட்ட ஒரு தலை பட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டுவிட்டது. பிரதிவாதி நிறுவனம் எங்களுக்கு செலுத்தவேண்டிய தாவா தொகையை திருப்பி செலுத்திவிட்டார்கள். வாதி, பிரதிவாதி

நிறுவனத்திற்கு இடையே இருந்த வழக்கு பிரச்சானை சமதானம் ஏற்ப்பட்டுவிட்டது. ஆகவே தாவாவை சமதானம் ஏற்பட்டுவிட்டதாக கருதி தள்ளுபடி செய்த உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.10.30 16:13:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.